
# ஆத்ம ஜோதி




மலர்: 11. விளம்பி வருடம் ஐப்பசி மீ 1௨ இதழ்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு


எல்லா உலகிற்கும்
இறைவன் ஒருவன்
எல்லா உடலும்
இறைவன் ஆலயமே.
... சுத்தானந்தர்


சோதி 11 சுடர் 1. விளம்பி ஹூ ஐப்பசி 1-11-58.


## பொருளடக்கம்


குருவின் உபதேசம்
பேரின்பத்தெள்ளமுது
வாழ்வின் இரகசியம்
எப்படிவாய்க்கும்
ஈழத்துக்குருபீடம்
அன்பு
வினயம்
குணங்குடியார்
யோக ஆசனம்
ஐயந்தெளிதல்
உபநிஷத்துண்மைகள்
கல்லைக்கண்டால்...



## ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள்சந்தா ரூ. 75-00 வருடசந்தா ரூ. 3-00
— தனிப்பிரதி சதம் -30 —
கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.
பதிப்பாசிரியர்: நா. முத்தையா.
ஆத்மஜோதி நிலையம்-நாவலப்பிட்டி (சிலோன்)


# குருவின் உபதேசம்

*(தியானகாலம்)*

இதோ ஓர் உள்ளுலகும் ஒரு வெளி உலகமும் உள. ஆன்ம உலகம் ஒன்று. உருவ உலகம் ஒன்று. என்மகனே வெளி உலகத்தில் அற்புதங்களும் மறை பொருள்களும் விரிவுத்தன்மையும், அழகும், மகிமையும் எப்படி உண்டோ அப்படியே அளவிறந்த மாட்சிமையும், சக்திகளும் சொல்லொணுச் சுகமும், சாந்தமும், மெய்ப்பொருளின் அசைக்கக்கூடாத அத்திவாரமும் உள்ளுலகத்திலும் உள. உள்ளுலகத்தைப்போன்றதே வெளி உலகமும். உள்ளுலகத்துக்குள்ளேயே உனது உண்மையான சுபாவம் இருக்கின்றது. நீ இங்கே நித்தியத்துள் வசிக்கின்ருய்; வெளி உலகமோ காலத்துட்பட்டது. உள்ளுலகின் கண்ணே முடிவற்ற அளவற்ற ஆனந்தம் உளது. வெளி உலகத்திலோ, உணர்ச்சியானது இன்பதுன்பங்களோடு கலந்திருக்கின்றது. உள்ளுலகத்தினுள்ளும் துன்பம் இருக்கின்றது. ஆனல் அது என்ன பரமானந்தமான துன்பம். உண்மையை முற்றுயே அனுபவிக்கவில்லையென்ற பெருந்துன்பம். அப்படிப்பட்ட பெருந்துன்பம் பரவசப்பட்டதுன்பம். அந்தத் துன்பம் இன்னும் அதிகமான மங்கள சுகத்திற்கு வழியாயிருக்கின்றது.

"மகனே வா! உனது இயற்கையை இந்த உள்ளுலகத்துக்குள்ளே இழு. என்மேலுள்ள பேரன்பாகிய இறகுகளை விரித்துக்கொண்டுவா. குருவுக்கும் சீடனுக்கும் இடையேயுள்ள அன்னியோன்னியக் கலப்பைக் காட்டிலும் நெருங்கிய கலப்பு வேறெங்குமே இல்லை.



# பேரின்பத் தெள்ளமுது.

— மகரிஷி சுத்தானந்தர் —

நீயே எனக்கன்னை; நீயே யெனக் கப்பன்;
நீயே எனக்குச் சுற்றம்
நீயே எனக்குலகு, நீயே எனக்குறவு
நீயே எனக் கிகபரம்!
நீயே எனக்குநிதி, நீயே எனக்கு மதி,
நீயே எனக்குக் கதியே!
நீயே எனக்குக் குரு, நீயே எனக்குமொழி
நீயே எனக்கு வழியே!
நீயே எனக்குணர்வு, நீயே எனக்குயர்வு,
நீயே எனக்கனுபவம்!
நீயே எனக்கருமை, நீமே எனக்கபயம்,
நீயே எனக்கிறைவனே!
ஆயிரங் கதிர்வீ சருட்பெருஞ் சோதியே
ஆன்மநிறைவே ஆதியே!
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே! 11

உண்ணுவது முன்னால், உயிர்ப்பதுவு முன்னால்
உணர்வதுவு முன்றனாலே
ஊருவது முன்னால், உரைப்பதுவு முன்னால்,
உவப்பதுவு முன்றனாலே!
எண்ணுவது முன்னால், இயங்குவது முன்னால்,
இருப்பதுவு முன்றனாலே!
ஏதேது செய்திடினு மெல்லாமு னிச்சையே
எல்லாமுன் ஆராதனை
கண்ணிருந்துங் கருத்தற்றவர்கள் காண்பரோ
கண்ணுளே காண் கண்ணனே!
காட்சியே, ஜகஜீவ சாட்சியே, காட்சிதரு
கதிரே கதிர்ப் பிழம்பே!
அண்மைக்கும் அண்மையே அப்பாற்கும் அப்பால்
அதற்குமப்பால் இலங்கி
அருள்பெருகு மறிவுவள மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே! 12



# வாழ்வின் சிகரம்

(ஆசிரியர்)

பிரம தேவரின் சிருட்டிகளுக்குள்ளே மனித சிருட்டியே முதன்மை பெற்றிருக்கிறது. தேவர்களே மனித சிருட்டியைப் பார்த்துப் பொறாமைகொள்ளுகின்றார்கள். "பூமியில்போய்ப் பிறவாமையில் நாள் நாம் போக்குகின்றோம் அவமே" எனத் தேவர்கள் வாய்விட்டுப்பிதற்றுகின்றனர். மனிதனோ தன்னிலை யறியாது கீழ்நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறான். தான் ஆத்மா என்பதை அடிக்கடி மறந்துபோகிறான். தேக, மனோபாவமே அடிக்கடி தலையெடுக்கிறது.

மனித வாழ்க்கையால் பெறக்கூடிய பலன்கள் மிகப்பெரியனவும் நிகரற்றனவுமாகும். பிரதானமாக அது சரீர மன ஆத்ம நிலைகளென மூன்றால் ஆக்கப்பட்டிருக்கின்றது. இந்த மகத்தான வாழ்வை, அதன் நுண்ணிய உயர்ந்த நிலைகளைப் பேணாது' சரீரத்தைமாத்திரம் பேணிநடத்தினால் மனிதவாழ்வு மிருகங்களின் வாழ்வைப் பார்க்கிலும் தாழ்ந்த நிலையை அடைகின்றது. சாதாரண வாழ்க்கையில் உண்பதும் உறங்குவதுமே முக்கிய தொழிளாகக் காணப்பெறுகின்றது. நித்திரை விட்டெழுந்தால் மறுபடியும் நித்திரைக்குச் செல்லும்வரை தேகவியவகாரமேமனிதனை ஆட்டிவைக்கின்றது.

தேகதத்துவத்தைக் கடந்த மானசவாழ்க்கை, வாழ்வின் நுண்ணியமகிமையைச் சிறிது உணர்ந்ததாய்த் தேகதத்துவத்தைக் கொண்ட வாழ்வைப் பார்க்கிலும் பரந்த நிலையிலுள்ளது. ஆனால் கீழ்நிலைகள் இரண்டையும் கடந்துவிட்டால் உயர்ந்தவாழ்க்கை உதயமாகிறது. கீழ்நிலைகளிலே காணப்படும் குறுகியநோக்கங்கள் எல்லைகள் என்பன அளவில்லாத அகன்ற சிறந்ததான அனைத்தையும் தழுவி நிற்கும் ஆத்மீக உணர்வெனும் உயர்ந்த அறிவிலே மறைந்துவிட்ட உன்னத நிலையை அடையும். தேகத்தையே

நினைந்துவாழ்பவன் அவா, பற்றுக்களுக்காளாகி அக்குணங்களே உருவாகிறான். மானசவாழ்க்கைக்குயரும் போது அன்பு தோன்றுகிறது. ஆத்மீகவாழ்வில் அருளே மயமாகின்றான்.

இந்த உன்னத உணர்விலேதான் கணக்கிலா உயிர்களும் பொருள்களும் அடங்கிய உலகம் முழுவதன் ஆணிவேர் தங்கி நிற்கிறது. ஆத்மாவை உணரும் போதுதான் மற்றைய உயிர்களை அன்புசெய்து அருள்பாலிக்கும் மனோபாவம் ஏற்படுகிறது. ஆத்மா எல்லைகடந்த மூலப் பொருளாகும். அது அறிவு, அன்பு, நித்தியம், இன்பம் என்னும் ஒளியை வீசும் சர்வசக்தியாகும். மக்களும் மற்றைய உயிர்களும் அறிந்தோ அறியாமலோ பிறவிதோறும் ஒவ்வொரு படி உயர்ந்து கொண்டே செல்கின்றன. அவற்றின் வாழ்வின் சிகரம் ஆத்மீக உண்மையே. மூலாதார உண்மையும் இதுதான். எங்களைச்சுற்றிலும் தினமும் எத்தனையோவித விவாதங்களும் போராட்டங்களும் நிகழ்கின்றன. இவையெல்லாம் தேகமனோநிலைகளின் குழப்பங்களே. எந்த உண்மையைக் கண்டுபிடித்தால் இவை தீருமோ அந்த அடிப்படியான உண்மையை நாடித் தேடவேண்டும். மகாத்மாகாந்தியடிகள் ஆத்மீக வாழ்விலேதான் இராமராச்சியத்தை அமைக்க முயன்றார். தேகமனோவாழ்வே சாசுவதம் என்று நம்பிவாழும் நாடுகளிலே தினமும் ஏதோ ஒரு குழப்பம் நடந்துகொண்டேதானிருக்கிறது. தனிமனிதன் வாழ்வே சமூகவாழ்வாகவும் உலக வாழ்வாக விரிவடைகிறது.

தன்னை ஆத்மா என உணர்ந்தவன், தன் ஆத்மாவே எல்லா உயிர்களிலும் பிரதிபலிக்கக்காண்பவன் எங்ஙனம் பிற உயிர்களுக்குத் தீமை புரியமுடியும்? குறுகிய இலட்சியங்களின் போராட்டங்கள், குறுகிய தன்னயங்கருதும் செய்கைகள், சுயநலவேட்கை என்பனவெல்லாம் ஆத்மாவை உணர்ந்தவனிடையே மறைந்துவிடுகின்றன. உண்மையான விடுதலை, ஒற்றுமை, சாந்தி என்பவற்றைக்காணுதலில்



உலகம் எப்போதுமே பின்னின்றதில்லை. சர்வவியாபகமானதும், நித்தியமானதுமாகிய இந்த இலட்சியத்தை மனிதவாழ்வு அடையச்செய்வதற்கு வழியாதெனில் தேகமனோ எல்லைகளைக் கடந்து சிறந்த ஆத்மமண்டலங்களுக்குள்ளே சென்று எல்லா உயிர்கள் பொருள்களினதும் ஒருமைப்பாட்டை உணர்தலாகும். சக்தி ஞானம் இன்பமென்னும் சுகவாழ்க்கை வாழ்தலே வாழ்வின் உண்மை வழியும் இனிய நிறைவுமாகும்.

இத்தகைய வாழ்வு வாழ விருப்பமா? சரீரத்தையும் மனதையும் ஆண்டவன் திருவடியிலே அன்புக் காணிக்கையாக வைத்து விடுங்கள். வாழ்வில் ஒளிபெற வேண்டுமானால் இந்த நிவேதனம் அவசியமாகும். மேலானவாழ்வுக்காகக் கீழான வாழ்வை முற்றிலும் தியாகம் செய்தலே வாழ்வின் சிகரத்தை அடைய வழியாகும்.

மெய்ஞ்ஞானம் அடைந்த ஒருவன் மனிதனது உண்மை உருவத்தை உணர்த்தி, ஆயிரக்கணக்கானோரின் உள்ளத்தில் இம்மின்சாரத்தை ஏற்றித் தங்கள் நித்திய, சர்வவியாபக நித்தியானந்த இயல்பை உணர்ந்து விழிப்புறச்செய்யமுடியும். ஆத்மீகவாழ்வு வாழ்ந்தால்தான் மனிதனும் உலகமும் புலன்களின் வேற்றுமை உணர்ச்சிகளிலிருந்து விடுதலையடைய முடியும். நிலையான ஒற்றுமையும் சாந்தியும் பெற முடியும்.

நித்தியப்பொருளைப்பற்றி அறியும் அறிவினால் ஏற்படும் இன்பமே உண்மையானது. உறுதியான ஆவலோடு அதிரகசியமான நன்மை பயக்கும் ஆத்மமண்டலங்களுக்குள்ளே சென்றால் அவ்வின்பம் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். அங்கேதான் உண்மையின் பலமும் இன்பமும் உண்டு. சரீரத்தை சுயநலமற்றபணியில் ஈடுபடுத்தினால் தேகபாவத்தை இலகுவில் கடக்கலாம். மனதிலிருந்து கீழ்த்தரமான விருப்பங்களை அகற்றினால் மனோவாழ்வைவெல்லலாம். அப்பால் ஆத்மீக வாழ்வு உதயமாகிறது. இதுவேவாழ்வின் உச்சிக்கோடாகும்.

# எப்படி வாய்க்கும்?

போதநூற் பயிற்சி யில்லை,
புனிதநன் முயற்சி யில்லை;
சாதனைப் பழக்க மில்லை,
தவறிடா ஒழுக்க மில்லை;
காதலால் கரைத லில்லை;
கண்கள்நீர் சொரித லில்லை;
மாதவப் பயனை வேண்டின்,
வாய்க்குமோ, மடமை நெஞ்சே? 1

சத்திய வேட்கை யில்லை,
சத்சங்க நாட்டமில்லை;
பித்துறும் ஆர்வ மில்லை;
பேரன்பர் பணியு மில்லை;
சித்தத்தில் உறுதி யில்லை,
திடமில்லை, பக்தி யில்லை;
முத்தியே வருக வென்றால்;
கிட்டுமோ, மூட நெஞ்சே? 2

சினவெறி அழிய வில்லை,
தீக்காமல் ஒழிய வில்லை;
பணவெறி யகல வில்லை;
பந்தத்தைக் களைய வில்லை;
இனவெறி தணிய வில்லை,
இதயமோ கனிய வில்லை;
புனிதநல் லமைதி வேண்டின்,
பொருந்துமோ, இரும்பு நெஞ்சே? 3



பாசத்தைக் கடக்க வில்லை,
பாவத்தைத் தொலைக்க வில்லை;
ஆசையை அகற்ற வில்லை;
அச்சத்தைத் தவிர்க்க வில்லை;
மாசெலாம் துடைக்கவில்லை,
மமதைவே ரறுக்க வில்லை;
ஈசனார் நேசம் வேண்டின்,
எப்படி வாய்க்கும், நெஞ்சே? 4

வீதியைக் கடந்த பெண்ணின்
விருப்பினைக் கடக்க வில்லை;
பாதியிற் புகுந்த கல்வி,
பணம், புகழ் கடக்க வில்லை;
சாதியிற் கிடந்த நெஞ்சின்
தடையெலாம் கடக்க வில்லை;
பேதத்தைக் கடந்த பாதப்
பேறுண்டோ, பேதை நெஞ்சே? 5

(பரமஹம்ஸ தாசன்)

## - பொன்மொழிகள் -

வாழ்வில் சாதாரணமாக அதின் இயற்கை அமைப்பாக ஏற்படும் கஷ்டங்களுக்கஞ்சுங் கோழைகள் தம்மைக் கூற்றுவன் கடைத்தெருவில் விற்றுக்கொள்ளும் பேதைமைச் செய்கையே தற்கொலை எனப்படும்.

# ஸ்ரீலஸ்ரீ மகாதேவ சுவாமிகளும் ஈழத்துக்குருபீடமும்.

முற்றொடர்ச்சி

பருவ வாழ்விலேயே புலப்படத் தக்கதாக தன்லடக்கம் செபதபம், விரதங்காத்தல், பெரியோர்ப் பேணல், ஆலய வழிபாடு, ஞானசாதனம் முதலியவற்றில் சிறந்து விளங்கினார். இவருக்கு மூன்று ஆண் சகோதரர்களும் இரண்டு பெண் சகோதரிகளும் இருந்தனர். இவர் குடும்பத்தின் மூதல் பிள்ளை. தமது பெருமுயற்சியினால் தமது குடும்பத்தைப் பேணிப் பாதுகாத்துவந்தார். ஒருபக்கம் ஆத்மீகப் பசி எடுக்க மறுபக்கம் தன் தாய்-தந்தையரை வயிற்றுப்பசியால் வாடாது பாதுகாத்து வந்தார், இதற்காக தமது கிராமத்தில் விவசாயத்தில் ஈடுபட்டதோடு நில்லாது சங்குவேலியைச் சேர்ந்த மட்டக்கலப்பு வைத்திலிங்கம் என்னும் ஓர் தனவந்தனுக்குக் கணக்கப்பிள்ளையாய் அமர்ந்து அதனால் வரும் ஊதியத்தைக்கொண்டே தன்னையும் தமது பெற்றோரையும் ஓம்பி வரலானார். இதனால் இவர் வாழ்க்கையில் பிறர் கையை எதிர்பார்க்கும் சூழ்நிலை ஏற்படவேயில்லை- தமது ஓய்வுநேரம் முழுவதும் சாத்திரம் பயிலுவதே தொழிலாகக் கொண்டிருப்பார். இப்படியாக நாட்கள் செல்லச் செல்ல ஞானதாகமும் அதிகரித்தது.

கீரிமலையில் ஓர் மடங்கட்டுவதற்கு மட்டக்களப்பு வயித்திலிங்கம், சுவாமிகளையே மேற்பார்வையாளராக அமர்த்தினார் மடங்கட்டப்படுங்காலையில் ஆலய தரிசனைக்காக அங்குள்ள சிவாலயத்துக்குச் செல்வார். அங்கு ஒருநாள் கண்ணம்மச்சி என்ற அம்மையார் ஓர் புத்தகம் வைத்துப் படித்துக் கொண்டிருக்கக் கண்டார். இவர் அப்புத்தகம் ஓர் உயர்ந்த நூலாயிருக்க வேண்டுமென்றெண்ணி "ஓர் தரம் பார்த்துவிட்டுத் தருகிறேன் தாருங்கள்" என்று அந்த அம்மையாரைக் கேட்டார். அதற்கு அம்மையார்; இது எமது குருவின் உத்தரவின்றித் தருவதற்கில்லை. குருவின்மூலம் தான் இத்தகைய நூல்கள் தரப்படவேண்டும் என்று கூறினார் சுவாமிகளுக்கு உடனே அக்குருவைக் காணவேண்டும் – அப்புத்தகத்தையும் படிக்க வேண்டும் என்ற பேரவா எழுந்தது. எங்கே குரு இருக்கிறார்கள் என அம்மையாரிடம் கேட்டறிந்து உள்ளம்சிர்க்க உணர்ச்சி வசப்பட்டு அம்மையார் காட்டிய இடத்திற்கு விரைந்து சென்றார். கனகரெத்தினம் சுவாமிகள் அதுவரையும் (சிருப்பர் மடத்து அறையில்) தியானித்திருந்துவிட்டு ஞானகுரவனைத் தேடிவரும் தம்பையாவை நோக்கி வாசலண்டை வந்துசேர்ந்தார். அக்கணமே திரு. தம்பையாவும் மெய்மறந்து அந்த ஞானகுரவரின் திருப்பாதங்களைப்பிடித்து வீழ்ந்து நமஸ்கரித்து ஆனந்தக்கண்ணீர் பெருகக் கிடந்தார். குருநாதன் தன் குழந்தையின் பரிபக்குவ நிலையறிந்து அவரைத்தேற்றி



வேண்டியதென்ன என்று வினவினார். பிறவாப் பெருவாழ்வுதரும் மெய்ஞ்ஞானம் பெறுவதே எமது அபிலாட்சை என்றுதழுதழுத்த குரலில் கூறிப் பணிந்து நின்றார். ஸ்ரீ கனகரத்தினம் சுவாமிகள் எதற்கும் அஞ்சேல் எனத் தஞ்சமளித்து எம்மிடம் அடிக்கடி வந்து போக வேண்டும்; எனப் பணித்து கண்ணம்மாச்சியின் கையில் இருந்த "மோட்ச சாதன இரகசியம் என்ற நூலையும் தமது கரத்தால் வாங்கி திரு. தம்பையாவின் கையில் கொடுத்தார். அன்று தொட்டு திருநெல்வேலியில் உடையார் வீட்டில் பெரிய சுவாமிகள் நடாத்தும் வேதாந்த வகுப்பிற்குக் கிரமம் தவறாமல் சென்று பாடங்கேட்டு வரலானார். திரு. தப்பையா பெரியகடை தையல்நாயகி அம்பாளைத் தினமும் தரிசனை செய்வது வழக்கம். தேவிடபாசனையில் மிக்க ஈடுபாடுடையவராக இருந்தார்.

பின் யாத்திரைக்ள் பல சென்றார்கள். தமது குருநாதருடன் இந்திய யாத்திரையில் சென்றபோதுதான் மணிவாசகர் ஞானதீட்சைபெற்ற திருத்தலமாகிய திருப்பெருந்துறையில் திரு. தம்பையாவுக்கு ஸ்ரீ கனகரத்தினம் சுவாமிகளால் ஞானதீக்கைவைக்கப்பட்டு மகாதேசுவாமி என்ற தீட்சா ஞானமும் சூட்டப்பட்டது.

யாத்திரையால் இலங்கை திரும்பியதும் தமது குருநாதனுக்கேற்ற ஓர் ஆச்சிரமம் அமைக்கத் திருவுளாட் கொண்ட மகாதேவ சுவாமிகள், பல அன்பர்களிடம் உதவி கோரினார். திரு. வை. சி. குமாரசாமி அவர்களின் தந்தையார் நிலம் அளித்தார்கள், வேறு பல அன்பர்கள் கட்டிடத்துக்குத் தேவையான பணம் உதவினார்கள். சுவாமிகளின் மனதுக்கிசைந்த ஆச்சிரமத்தைத் தானே முன்னின்று கட்டி முடித்தார்கள். இதற்கு இவரின் உடன் மாணவராகிய கைலாய நாதசுவாமிகளும் வேண்டிய உதவி புரிந்தார். அதற்கு சிவகுருநாதபீடம் எனப்பெயரிட்டு ஸ்ரீ கனகரத்தினம் சுவாமிகளை ப்ரமாசாரியராகக் கொண்டு குருபீடம் செயலாற்றத் தொடங்கியது. ஆண்பெண் இருபாலாருமாக நூற்றுக்கணக்கான அன்பர்கள் கூடி வேதாந்த சிரவணம் செய்து வரலானார்கள். இதில் வேதாந்தம் போதிக்கப்பட்டு வரும்போது வேதாந்த சித்தாந்த மாறுபாடுகளுக்கிடமளியாது சமரச நோக்குடனேயே கல்வி போதிக்கப்பட்டது. இதனால் கனகரத்தினம் சுவாமிகளாயினும் சரி அவர்பின் மகாதேவ சுவாமிகளாயினும் சரி தம்மையடுத்துவரும் மாணவர்களுக்கு அவரவர் தரத்துக்கேற்ற முறையில் உண்மையை விளக்கி வைத்து வந்தார்கள்.

மகாதேவ சுவாமிகள் உடல் தாங்கி உதித்த கிராமமாகிய கரம்பனிலும் சைவமும் தமிழும் வளர்க்கும் எண்ணங்கொண்டு அங்கு

சண்முக வித்தியாசாலையைத் தாபித்தார்கள். இதன்பின் பல விடங்களிலும் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பலரையும் தூண்டி முயற்சித்து வந்தார்கள். இதன் பயனாகத் துன்னாலையில் ஞானாசாரிய வித்தியாசாலைக்கு அத்திவாரமிட்டு அதை ஆரம்பித்து வைத்தார்கள். அது இப்போஓர் கல்லூரியாகத் திகழுகிறது. அங்கு அத்திவாரக்கல்நாட்டிய தினத்தை இப்பெரியாரின் பெயரால் பெரு வைபவமாக இன்றும் கொண்டாடி வருகின்றார்கள்.

இப்படியாகப் பல பொது வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டு தாம் நித்தியபிரமசாரியாக இருந்து வருநாளில் ஸ்ரீ கனகரத்தினம் சுவாமிகள் இவரை அழைத்துக் காவிகொடுத்து மடத்திலிருந்து கடமையாற்றும்படி பணித்தார். இதன்பின் தமது குடும்ப நிர்வாகத்தைத் தன் சகோதரர்பால் விட்டுத் தமது குருநாதன் பணித்தசேவையில் முழுவதும் ஈடுபட்டு வருவாராயினர்.

இப்பெரியார் ஆச்சிரமத்துக்கு வரும் மாணவர்களுக்குப் பாடம் போதிப்பதோடு ஆங்காங்கு ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் சென்று சமயப்பிரசங்கங்கள் செய்து மக்களிடையே அரிய உண்மைக் கருத்துக்களைப் பரப்பி வருவாராயினார். இவர் போதித்தவாறே சாதனையிலும் ஈடுபட்டவராதலினால் மக்கள் இப்பெருந்தகையைப்போற்றி அவர் சொற்கேட்டு ஒழுகிவரலானார்கள். இவர் ஞான முதிர்ச்சியுடையவரன்றி அனுபூதிச்செல்வருமாவர். இவர் தம் தோற்றம், பேச்சு, நடை யாவும் எவரையும் தம் பால் ஈர்க்கும் அன்புமயமான தன்மை வாய்ந்தவை. இதனால் எவரும் தமது சந்தேக விபரீதங்களைப் போக்குதற்குக் கூசாது அவர் முன்சென்று தமது குறையை நிவர்த்தித்துக் கொள்ளுவர். அவரும் காட்சிக்கெளியராய் கடும் சொல்லரல்லராய் ஞான ஒளிபரப்பும் பரமாசாரியராக இருந்து பல ஞானக்குழந்தைகளை வளர்த்துவந்தார். இப்பெரியாரின் மாணாக்கர்கள் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் இன்றும் இருக்கிறார்கள். சுவாமிகளின் காலத்தில் விபுலானந்த அடிகள், வித்தியாலந்த தயாராம், உருத்திர கோடீஷ்வர சுவாமிகள், ஞானானந்த சுவாமிகளும் மாணவரும் சிவகுருநாத பீடத்துக்குச் சமுகமளித்துப் பலநாள் தங்கியிருந்து சென்றிருக்கிறார்கள்,

சுவாமிகள் இக்குருபீடம் தளர்வின்றி நடைபெற வருவாய் தரக்கூடிய தென்னந்தோப்புகள் வாங்கிவிட்டதோடு இதன் கிளை மடமொன்றை விளவேலி என்ற இடத்தில் ஆரம்பித்தும் வைத்தார்கள்.



இப்படியாக வுளப்பெரும்சேவைகளில் ஈடுபட்டிருந்து வேதாந்த ஞானவெள்ளத்தைப் பெருக்கெடுக்கச்செய்த பரமாசாரிய ஞானக்கொண்டல் தம் வினை முடிவெய்தும் காலம் நெருங்கிவிட்டதையுணர்ந்தார். தூலஉடல் நீக்க ஓர் ஏதுவும் வேண்டுமன்றோ? சிலநாள் சுகவீன நிலையில் இருந்தார். மருந்துசாப்பிட மறுத்துவிட்டார். மலசலம் கழிவதும் அவருக்குத் தெரியவில்லை. வினை முடிந்தது. உடல்தினைப் போதளவும் நிற்கவில்லை. சமாதி எய்தும் சில நிமிஷங்களுக்கு முன் படுக்கையை விட்டு எழுந்திருந்து கெம்பீரமாக இருந்தார். தமது கரத்தால் கீழே தொங்கியிருந்த கீழ்வாய் உதட்டை அழுத்திப் பொருத்தி மூடினார். அதன் பின் பேச்சுமில்லை மூச்சுமில்லை. 1942ம் ஆண்டு ஐப்பசி மீ 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு ஸ்ரீ மகாதேவ சுவாமிகள் சயாதி எய்தினார். பூர்ணம் பூரணமாய் விட்டது. இக்குரவரின் பின் குருபீடத்தை ஸ்ரீஇராமலிங்க சுவாமிகள் நிர்வகித்து வருகிறார்கள். சுவாமிகளின் உத்தம மணவராகிய இன்னோர் பெரியாராகும் திரு. க. வடிவேற்சுவாமிகள் பல விடங்களிலும் சமயப்பிரசங்கங்கள் செய்து நித்திய சந்நியாசியாக விருந்து தன் குருநாதன் வரன்முறை வழுவாது வாழ்ந்து வருகிறார்: அவர் இப்போ உருத்திரபுரத்தில் ஜெயந்திநகர் என்ற கிராமத்தில் "மகாதேவ ஆச்சிரமம்" ஒன்றை நிறுவி அப்பகுதிகளில் சைவப்பணி பல புரிந்து வருகிறார்கள்.

**ஸ்ரீ சற்குரு பாதம் வாழ்க!**

## பொன்மொழிகள்

நாம் வளையாத தன்மையும் எதிர்ப்பும் எதிர்க்கும் இயல்பும் உடையோராயின் வாழ்க்கையின் கஷ்டங்களைப் பெருக்கி அதன் ஆனந்தத்தைச் சுருக்கிக் கொள்கிறோம். நாம் வளைந்து கொடுக்கும் இயல்பையும் எதிர்க்காத தன்மையையும் உடையோமாயின் நாம் வாழ்க்கையின் கஷ்டங்களைச் சுருக்கி ஆனந்தத்தைப் பெருக்கிக் கொள்கிறோம்.

# அன்பு

[காந்தி]

பாரதத் தாய்க்குப் பலமும் தன்னம்பிக்கையும் வந்துவிட்டால், தனக்குத் தீங்கிழைப்பவர்களைப் பகைப்பதை நிறுத்தி விடுவாள். ஏனெனில் அப்பொழுது அவளுக்கு அவர்களைத் தண்டிக்கவும் அதனால் அவர்களிடம் இரங்கி அவர்களை மன்னிக்கவும் முடியும். இப்பொழுதோ அவளிடம் தண்டிக்கவும் சக்தியில்லை; அதனால் அவள் வீணே பகைமையைத் தான் பாராட்டி வருகிறாள்.

... ... ...

துன்பத்தை மகிழ்வுடன் சகித்தால் அது துன்பமாய் இராது. சொல்லொணாது இன்பமாய் மாறிவிடும், துன்பத்திற்கு அஞ்சி ஓடுபவன் துன்பம் வருமுன் முடிவிலாக் கஷ்டம் அனுபவிப்பான். துன்பம் வந்தபின் அரை உயிராய் விடுவான். ஆனால் வருவது எதையும் மகிழ்வுடன் அனுபவிக்கத் தயாராய் இருப்பவன் சகல துன்பத்தினின்றும் தப்பி விடுவான். அவனுடைய அகமகிழ்ச்சியே துன்பத்தை மாற்றும் மருந்தாகும்.

... ... ...

கொடியவனை மதியாது தலை நிமிர்ந்து நிற்பதற்குரிய வழி அவனை வெறுப்பது மன்று, அடிப்பது மன்று, துயருற்று வருந்தும்பொழுது நாமே கடவுள் முன்பணிந்து முறையிட்டுக் கொள்ளுதலேயாகும்.

... ... ...

அகிம்சா தர்மத்தை நம்புபவன் எதையேனும் காப்பாற்றுவதற்காக நேராகவோ அல்லது வேறாகவோ பலாத்மாரம் உபயோகிக்கர் திருக்கக் கடமைப்பட்டவள், ஆனால் அகிம்சையை ஆதாரமாகக் கொள்ளாத மனிதர்களுக்கும் ஸ்தாபனங்களுக்கும் உதவிசெய்யக் கூடாதென்பதில்லை. உதவி செய்யக் கூடாதென்றால் என்மகன் அகிம்சையை நம்பாதிருப்பதால் அவனுக்கு நியாயம் கிடைப்பதற்காகக்கூட யாதொரு உதவியும் செய்யக்கூடாது என்று ஏற்படும்.

... ... ...

ஒருவன் அகிம்சையை அனுட்டிக்க வேண்டியதவசியம். ஆனால் அதற்கு அவன் சும்மா இருக்கவேண்டும் என்பது பொருளன்று.

ஒரு இயக்கம் பெரிதாயிருந்தாலும் சரி, விரைவாய் நடத்தினாலும் சரி, கஷ்டத்திற்குப் பயந்தால் அத்தகைய இயக்கத்தை ஒருபொழுதும் நடத்தமுடியாது. பெரிய கஷ்டங்களை எதிர்பார்த்துப் பெருங்காரியங்களைச் செய்யாமல் வாழ்வதால் பலன் ஒன்றும் கிடையாது.

... ... ...

மனிதனிடமுள்ள மிருகக் குணத்தை ஒழிக்க வேண்டியது அவசியம். ஆனால் அதற்காக அவனைப் பேடியாக்கி விடக் கூடாது. அவ்விதம் மிருகக்குணத்தை ஒழிக்க முயலுகையில் சில சமயங்களில் அது தலைக்காட்டவும் கூடும்.

... ... ...

பதிலுக்குப் பதில் செய்வது இரண்டுபக்கமும் கூர்மையுள்ள ஆயுதமாகும். எவனுக்கு விரோதமாக உபயோகிக்கப் படுகிறதோ அவனுக்கு அது துன்பம் இழைக்குமாயின் உபயோகிக்கிறவனுக்கும் துன்பம் இழைக்காமல் இராது.

... ... ...

உண்மை பொய்யை அவித்துவிடும். அன்பு கோபத்தை அவித்துவிடும். துன்பம் நோற்றல் ஹிம்சையை அவித்துவிடும். இந்த அழியாத விதி ஞானிகளுக்கு மட்டுமின்றி அனைவர்க்கும் உரியதே.

... ... ...

உலகத்தைத் தாங்கி நிற்பது அன்பு ஒன்றே என்பது என் திடமான நம்பிக்கை. அன்புள்ள இடமே வாழ்வுண்டு. அன்பில்லா வாழ்வு மரணமே.

... ... ...

கெவ்வளவுக் கெவயளவு சக்தி வெளித்தோன்றுதிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவே அது பலனுடையதாகும். அன்பு என்பதுவே உலகத்தில் எல்லாவற்றினும் வெளித்தோன்றாமல் வேலைசெய்யும் சக்தியாகும்.

... ... ...

அன்பைச் சோதிக்கும் உரை கஸ்தவமாகும். தவம் என்பது துன்பத்தை நோற்பதேயாகும்.

# விநயம்

(காமகோடி)

வாக்கிலும், செயலிலும் நயமில்லாதவர் கோபத்திற்கு இலக்காவர். கோபத்தினாலேற்படும் அளவிறந்த தீமைகளை நாம் நன்கறிவோம்; அறிந்தும் அதைக் கட்டுப்படுத்தி வெல்ல இயலவில்லை. காரணம், மனிதனின் இயல்பு. இயற்கை பிறப்புடன் கூடிவருவது, மாற்ற இயலாதது; இயல்பு பழக்கத்தினால் ஏற்படுவது, பயிற்சியினாலும் முயற்சியினாலும் மாற்றக்கூடியது. கோபத்தை வென்றவன் நியதியின் எல்லைக்குள்ளே செயல்பட்டு கோபத்தைத் துறக்கிறான்; கோபத்தை வென்றதன் மூலம் மேன்மையை அடைகிறான். கோபம் உண்டாவதற்கு முக்கியகாரணம் அஹங்காரமும், பொறுமையின்மையுமே. விநயத்தைக் கடைப்பிடிப்பவன் கோபமடைவது துர்லபம்.

விநயம் காட்ட பாத்திரத்தை நோக்கிக் கொண்டிருக்க வேண்டுவதில்லை. தோட்டிமுதல் தொண்டைமான்வரை, மூடன் முதல் புத்திமான்வரை, வீணன் முதல் ஞானிவரை எவருமே நமது விநயத்திற்குப் பாத்திரமானவரே. விநயம் பண்பின் இயற்கை; நல்வாழ்வின் இலக்கணம்; ஸத் ஸங்கத்தின் இயல்பு. முதுமைக்கு இளமை விநயம் காட்டவேண்டும்; பதியுடன் ஸதி விநயமாகப் பழகவேண்டும்; தோழமை விநயத்துடன் பரிமாறிக்கொள்ளப்படவேண்டும். ஆசாரியனிடத்து பக்தி செலுத்த விநயம் முதற்படி; பெற்றோரிடத்து அன்புசெலுத்த விநயம் ஆதாரச்ருதி; விநயம் ஸத்யத்தின் நியதி.

விநயமில்லாத வித்தை சோதனைக்காலத்துக்கு உதவாது; விநயத்துடன் கூடிய படிப்பே ஆண்டவன் அனுக்ரஹத்தை அள்ளிக்கொடுக்கும். விநயம், கற்றுணர்ந்த வித்தையை மேன்மேலும் மேரு மலைபோல்



வளர்க்கும். விநயம் மிகுந்தவரே ஆண்டவனுக்குகந்தவர். விநயமாகச் செலுத்தப்படும் அன்பு, ஆதரவு, பக்தி எதுவும் அபரிமிதமான நன்மையைப் பயக்கும். வாழ்க்கையின் வெற்றி, இதரரை மகிழ்விப்பதில் அடங்கியுள்ளது. வாழ்வின் ஸூக்ஷ்மாகாரத்தை அவலம்பிக்க விநயம் பழகவேண்டும். கர்மத்தை இடையறாது மன அழுக்காறின்றி புரிய மனம் தவறின்றி செயல்புரியவேண்டும். மனத்தைத் தவறான வழிகளிலிருந்து காப்பவைகளில் விநயத்திற்குப் பெரும் பங்குண்டு. ஸத்யபாஷியை உலகம் போஷிக்கும்; மித பாஷி மக்கள் மதிப்புக்குகந்தவன்; விநய பாஷியோ எவர்க்குமினியன். ஸத்ய வசனத்தை உரைப்பவன் விநயத்தைக் கைக்கொள்வானேயாகில் அவன் ஸகலருக்கும் இஷ்டனாவான். எக்கருமமும் நற்கருமமாவது அதன் விளைவிலே காணக்கிடைக்கும்; அவ்விளைவுக்கு விநயம் உறுதி கூட்ட வேண்டும்.

விநாயகன் விநயஸ்வரூபி. லோகத்தை ஒரு நொடியில் பிரதக்ஷிணம் செய்துவர ஆக்ஞாபிக்கப்பட்டபோது லோக சரண்யர்களான லோக நாயக நாயகியரையே வலம்வந்து மாங்கனியைப் பெற்றவரன்றோ! விநாயகரின் விநயம் லோகநாயக நாயகி இருவருக்கும் பெருமிதத்தை உண்டாக்கியதில் வியப்பு என்ன?

—வித்ய பாரதீயன்.

---

## -பொன்மொழிகள்-

சூளையில் வேகவைக்காத பானைகளை உடைத்து திரும்பவும் நமக்கிஷ்டமான வேறுவித உருவமுடைய சட்டிகளாகச்செய்து கொள்ளலாம். ஆனால் சுட்ட பானைகளை அவ்விதம் செய்யமுடியுமா? அதேபோல ஆத்மஞானமடையுமுன் சரீரம் அழிக்கப்படுமானால், திரும்பவும் திரும்பவும் சரீரம் பெற்றே தீரவேண்டும்.

# மஹான் குணங்குடியார் அருட்பாக்களின் விளக்கவுரை.

— சாந்தி —

எது வந்து நேரினும் மாறினு மிரண்டு
மொன் றென் றிருப்பது சமாதி.

ஞானவழியிலே முன்னேறிச் செல்லும் சாதகனுக்கு சில சமயங்களில் சூழ்நிலையின் காரணமாக மாறுதல்கள் ஏற்படுவது சகஜமே. மேலும் வாழ்க்கையில் கஷ்டங்களும். துக்கங்களும் நிகழ்வதும் சர்வசாதாரணமே. ஆனாலும் சாதகன் எல்லா நிலைகளிலும் பாதிக்காது அதாவது வெளி மாறுதலினால் மனம் அசையாது இருக்கப்பழகவேண்டும். சாதகன் அடிக்கடி தியானிப்பதினால் அவனுடைய உணர்ச்சிகள் கூர்மையாக இருக்கின்றன. ஆகையினால்தான் அவனது மனதை எந்தக்காரணத்தினாலும் கலங்கப்படுத்தாது ஒருமைப்பாடுடன் வைத்துக்கொள்ளவேண்டும். மனம் வெளித்தொடர்பினால் அசைந்துவிட்டால் அல்லது ஆசையின் காரணமாக மயங்கி விட்டால் தியான வாழ்க்கையில் சலிப்புத்தட்டிவிடும். ஆகவே சாதகன் இன்பத்தையும். துன்பத்தையும் சமமாகக் கருதவேண்டும்,

சலன சஞ்சலமது தொலைத்தருண் மலைப்புடையில்
சார்ந்திருப்பது சமாதி.

மனம் சலனமடைவதினால்தான் சஞ்சலம் தோன்றுகிறது. எண்ணங்கள் ஆசையின் பிடியிலே அகப்படுவதினால்தான் துக்கத்திற்கு ஏதுவாகிறது. அலையும் மனம் வெளி விவகாரத்தில் சுழன்று நிம்மதியில்லாது நிமிஷந்தோறும் குழப்பத்தினால் குமுறுகிறது. மனதை ஒன்றுபடுத்தும் விஷயத்தில் கஷ்டம் ஏற்படுவதற்குமுக்கிய காரணம் மனம் எதையாவது நினைத்துக்கொண்டு இருப்பதேயாகும், கற்பனையின் துணைகொண்டுதான் மனம் பல எண்ணற்ற நினைவுக் கட்டங்களை எழுப்புகின்றன. ஒவ்வொரு எண்ணமும் ஆசையின் அத்தி வாரத்திலே கிழம்புவதினால் ஆரம்பத்திலேயே அது அதிருப்தியினால் உளலுகிறது. ஆகவே மனதினால் பின்னப்பட்ட ஆசை வழியில் மனிதன் சிக்கும் வரையில் அவன் ஓயாத் துக்கத்திலே சுழல வேண்டியதுதான்.



ஞான மார்க்கத்திலே அடி எடுத்து வைக்கும் சாதகன் மனதின் சலனத்தை உடைத்தெறிந்து உண்மையான சாந்தியில் இன்பத்தை நுகரவேண்டும்.

பாயுமீராறு கலை பாயாது பக்குவம்
பண்ணி வைப்பது சமாதி.
பழவினை யிறக்கவுஞ் சுழிமுனை திறக்கவும்
பழகி வருவது சமாதி.

மனிதனுடைய எண்ணங்களுக்கும் சுவாசத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மனது மிகச் சூட்சுமமானது. மனதில் பல ஆசைகள் நிறைந்து குழம்பிக் கொண்டு இருந்தால் சுவாசமும் ஒழுங்கின்றி ஓடிக் கொண்டே இருக்கும். மனதை நேரடியாக ஒன்றுபடுத்தமுடியாததினால் சுவாசப்பியாசம் மூலமாக அதாவது மூச்சைக்கட்டுப்பாடுடன் ஒழுங்காகச் சுவாசிக்கப் பழகினால் மனம் அடங்கிவிடும். பிறகு தியானிப்பதற்கு இலகுவாக முடியும். இவ்வாறாக தினந்தோறும் தியானம் பழகிவந்தால் எத்தனையோ ஜென்மங்களில் சேகரித்த பழமையான வினைகள் யாவும் அதாவது துக்கத்திற்கு காரணமான ஆசைகள் யாவும் அழிந்துவிடும். பிறகு இரு புருவங்களின் மத்தியிலே இன்ப உணர்வுடன் நடன மாடிடும் அறிவுக்கண் திறந்து ஆத்மீக வாழ்விற்கு வழிகாட்டும்.

ஓவியம் போலிருந்துள்ளுருகு நல்லமிர்த
மொழுக வுண்பது சமாதி.

ஓவியம் எந்த வித அசைவுமில்லாது இருக்கிறது. அதுபோல்தான் ஆழ்ந்த அமைதியான தியா

னத்திலே லயமாகிய மனமானது எந்தவித சலனமுமின்றி இருக்கும். ஆனால் இங்கு முக்கியமான வேறுபாடு என்னவென்றால் ஓவியம் உயிரற்ற உணர்வற்ற பிம்பம். ஆனால் உயர்வான தியானத்திலே ஒன்றுபட்ட சாதகனுடைய மனமானது அமுதத்திலும் இனிமையாகிய ஆனந்தத்தை சதா காலமும் அனுபவித்துக்கொண்டு இருக்கிறது. மேலும் அறிவுத்தெளிவோடும் உணர்ச்சிகள் யாவும் முற்றிலும் ஆசைகளின் பிடியிலிருந்து விடுபட்டு உயர்வான ஆத்மீக வெளியிலே பரந்து நிற்கிறது. அங்குதான் வாழ்வின் லட்சியம் பூர்த்தியாகிறது. அதுவே பரிசுத்தமான தெய்வீக நிலையுமாகும்.



## பொன்மொழிகள்

உயர்ந்த சன்மார்க்க போதம் உலகில் எங்கேயாவது காணப்படுகிறதென்றால் அது ஏதேனும் ஒரு விதத்தில் இந்தியாவினின்று கொண்டுபோகப்பட்டதேயாம். ஆத்மன் அழிவற்றது எனும் பரந்த கோட்பாடு இப்பாருலகில் எவர்க்காவது தெரியுமென்றால் அவர்க்கு அத்தகைய அமுத வெள்ளத்தை அளித்தது இந்தியாவேயாம்!



(S. A. P. சிவலிங்கம்)

# 63. பாதி மச்சேந்திராசனம்

## (பழகும்விதம்)


சுத்தமானதும், சமதளமானதுமான கெட்டி விரிப்பின் மேல் இரண்டு கால்களையும் முன்பக்கம் நீட்டியுட்கார்ந்து கொள்ளவும்.

வலது காலை முழங்காலுடன் மடக்கி இடது கால் தொடைக்கு அடியில் அமர்த்தி ஆசனவாயில் வலதுகாலின் குதி தொட்டிருக்கும் வண்ணமமர்த்தவும். இந்நிலையில் இடது காலை வலது பக்கம். அதாவது வலது தொடையின் பக்கம் இடுப்பின் மூட்டுப்பக்கம் குத்தலாக அமர்த்தவும். முழங்கால் மேல்நோக்கியிருக்கவும்.

வலதுகையை இடதுமுழங்கால்மேல் அக்குள் படும்வண்ணம் அமர்த்தி வலது முழங்காலின்மேல் உள்ளங்கை படியும் வண்ணம் வைத்திருக்கவும். கை வளைவின்றி நேராய் வைத்திருக்கவும்.

இடது கையை முதுகின் பின்பக்கமாகக் கொணர்ந்து இடது கணுக்காலை நன்கு பிடித்துக்கொள்ளவும். இச்சமயத்தில் சுவாசம் முழுவதும் வெளிவிட்டு முதுகை இடப்பக்கமாய்த் திருப்பி முகத்தையும், கழுத்தையும் திருப்பிப்பார்வை ஓர் ஓரப்பக்கமாகப் பார்த்திருத்தல் வேண்டும். எவ்வளவு திருப்பயியலுமோ அவ்வளவு முதுகைத் திருப்புதல் வேண்டும். இவ்வாறு தீர்க்கமாக மூச்சை உள்ளிழுத்து வெளிவிடவும். சிலதடவைகள். ***சித்திரம் 63*** பார்க்கவும். பின் ஆசனத்தைக் கலைத்து மற்றப்பக்கமும் இவ்வாறே செய்து பயனடையவும்.

ஆரம்ப சாதகர்களுக்கு முதுகை இவ்வாறு திருப்பும் சமயம் "கடமுட" என முதுகின் எலும்பு சத்தம்வரும். நேராக இழுக்கப்பட்ட எலும்பு நன்கு திருப்பப்பட்டு நெட்டியை எடுக்கின்றது. இவற்றால் சகல பாகங்களுக்கும் நல்லது.




## கலைக்கும்விதம்

சுவாசத்தை உள்ளிழுத்துக் கொண்டே வலது முழங்காலின் மேல் வலது கையை எடுத்து முதுகை நேராய்க் கொண்டுவந்து இடது காலையும் நேராய் எடுத்து பின் வலதுகாலையும் நேராய்நீட்டி மல்லாந்து படுத்து சிரமபரிகாரம் செய்துகொள்ளவும். சாதாரணமாய் ஆரோக்கிய முள்ளவர்கள் இரண்டு பக்கமும் நான்குதடவைகள் வீதம் செய்யலாம். அதிகம் மெலிந்தவர்கள் அதிகம் செய்யக் கூடாது.

ஆண், பெண் அனைவரும் செய்யலாம். ஆனால் பெண்மணிகள் யோகாசிரியன் உதவிகொண்டு செய்யவும்.

இளமைபாருக்குத்தான் தேவையில்லை? எல்லோருக்கும் இளமையும், அழகும் தேவையே! அவற்றிற்கு உடலமைப்பு அவயவங்கள் சரிவர இருத்தல், தசைப்பொருத்தம் இவைகளும் அத்துடன் நோயற்ற வாழ்வும்சேர்ந்திருத்தல் வேண்டும். இந்த ஆசனம் சகலருக்கும் பல நன்மைகள்விளைவிக்கின்றது.

**பலன்கள்:-** அடிவயிறு, முதுகு, விலா எலும்பு, இடுப்பு, முதலியவற்றிற்கு ஆரோக்கியத்தைகொடுக்கின்றது.



அதிலேற்படும் வியாதியையும் குணப்படுத்தி, கூன்முதுகுள்ளவர்களையும் நிவிர்த்தி செய்கின்றது. முழங்கால், தொடைகள், கைகள் இவற்றிற்கு வலுவையும் எலும்புக்கு வீரியத்தையும் கொடுக்கின்றது. மலஜலம் நன்கு வெளியாகின்றது. முதுகெலும்பு நன்றாக முறுக்கப் படுகின்றது. துணியைத் துவைத்துப் பின் காயவைக்க அதைத்தண்ணீர்போக முறுக்குகின்றோம். பின் அவ்வாறு முறுக்கப்பட்டதுணி தண்ணீர் இன்றிச் சீக்கிரம் காய்ந்து போகின்றது. அவ்வாறு உடலில் இருக்கும் துர்நீர் யாவும் பஸ்மமாகி சகல அங்கங்களுக்கும் பூரண சுறுசுறுப்பையுண்டுபண்ணி ஆனந்தமுடன் இருக்கச் செய்கின்றது, முக்கியமாக ***"பஸ்சிமோத்தானாஸனம்"*** பலனையும் கொடுக்கும்.

***ஞாபகத்திலுறுத்துக:-*** சிரசாசனம் செய்து பின் இந்த ஆசனம் கண்டிப்பாய்ச் செய்யவேண்டும்.

***இதன்பெயர்:-*** யோகி மச்சேந்திரர் விரும்பிச் செய்யும் ஆசனம். ஆகவே அவரது பெயரால் இன்றும் மாறுபடாது வழங்கி வருகின்றது. ***பாதிமச்சேந்திராசனம்*** என்பது சமஸ்கிருத மொழியில் ***அர்த்தமச்சேந்திராசனம்*** எனவும் பொருள்படும். முழுநிலையிலில்லாது பாதி நிலையில் இருப்பதால் ஆசனக்கடைசித் தோற்றத்தின் பெயரும் முன் பெயரின் பாகமும் இணைக்கப்பட்டிருப்பதால் இப்பெயர் உண்டாயிற்று. மச்சாசனத்திலிருந்து வேறு பட்டதே ***அர்த்தமச்சேந்திராசனம்.***

---

### -பொன்மொழிகள்-

*ஒருவன் பிரபஞ்சம் முழுவதற்கும் தலைமை பெற்றாலும், தனக்குத் தலைமைபெற வேண்டியவனாய் இருக்கிறான். மனத்தினால் அறியக் கூடிய எல்லாவற்றையும் ஒருவன் அறிந்தாலும், தன்னையுந் தானே யறிய வேண்டியவனாயிருக்கிறான். ஏனெனில் பிரபஞ்சவாழ்வின் நோக்கம் தன்னைத்தான் அறிதலாம்.*

# உபநிஷத் உண்மைகள்

[வித்துவான் மு. கந்தையா]

‘விஸா’ பெறுவதென்றால் இன்று நம்மவர் எல்லோரும் இலகுவிற் புரிந்துகொள்ளக்கூடிய ஒரு விஷயம். இங்கிருந்து இந்தியாவுக்குப்போக ‘விஸா’ வேண்டும். ‘விஸா’ பெற்றுக்கொள்ளுபவர் முதலில் தன்னை அத்தாட்சிப்படுத்தித் தான் தானே என்பதை நிரூபிக்க வேண்டும் அல்லவா! இதுபோலவே, வாழ்க்கையுலகிலிருந்து முத்தியுலகிற்குப்போக விரும்பும் ஒரு சீவன் தான் தானே யென்பதை நிரூபிக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. நிரூபித்த பின்புதான் ‘விஸா’ப்பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக ஒருசீவன் முதலிலே தன்னைக் கண்டறியவேண்டியுள்ளது; தன் சுயரூபத்தைத்தேடிப்பிடிக்கவேண்டியுள்ளது. இந்தவிஷயம் சாதாரண ‘விஸா’ விஷயம் போலல்ல. மிகமிகப் பொறுப்பானது; மிகமிக முக்கியமானது. மிகமிகச் சிரத்தையானது.

அறிவினுளெல்லாந்தலையாய அறிவுதன்னை யறியுமறிவு. உயிரின் விமோசனம் இந்த அறிவிலேயே தங்கியுள்ளது. அதிலேதான் அது ஆறுதல் காண்கின்றது; ஆனந்தமும் அடைகிறது.

இந்த அறிவை பெற்றுக்கொள்ளவேண்டி நம்முன்னோர் மகத்தான புரட்சிகள் நிகழ்த்தியுள்ளார்கள். ஆயுதப் புரட்சியன்று, அனைத்தும் ஆத்மீகப்புரட்சி. அதனாற் பெரும் போராட்டங்கள் நிகழ்ந்தன; அயலவரறியாமல் அறிவாகிய அரங்கத்திலே அவை நிகழ்ந்தன. அனைத்தும் அந்தரங்கப் போராட்டங்கள். ஆயினும் அவை யனைத்தும் எப்படியோ நூல்வடிவில் வெளிவந்து விட்டன. இரகசியத்தில் நடைபெற்ற அப்போராட்டங்களையும் அவற்றின் பெறு பேறுகளையும் தொகுத்து இரகசியம் – உபநிஷத் – என்றே பெயரிட்டுள்ளார்கள். உபநிஷத்துக்கள் நூற்றுக்கணக்கில் மலிந்து கிடக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை பத்து. மற்ற உபநிஷத்துக்களில் கடைந்தெடுக்கப்பட வேண்டிய உண்மைகள் இவற்றில் தாமாகவே மிதக்கின்றன. அவற்றுள் ஒன்று கடோபநிஷத் என்பது.

இந்த உபநிஷத்தைத் திறந்த மாத்திரத்தே நம் கருத்தைக் கவ்வுகின்ற செய்தியொன்று உண்டு. இரண்டு மகானுபாவர்கள், குருவும் சீஷனும், ஓரிடத்தில் அமர்ந்திருக்கிறார்கள். பாடம் ஆரம்பிக்கப்போகிறது. மிக உருக்கமான பிரார்த்தனையொன்று நடைபெறுகின்றது. இருவரும் ஒரே குரலில் பாடுகின்றார்கள்.-



‘ஓம்’ ஸஹ நௌ அவது:– எங்கள் இருவரையும் சேர்த்துப் பிரமம் காப்பாற்றுக.

ஸஹ நௌ புனக்து:– எங்கள் இருவரையுஞ் சேர்ந்துப் பிரமம் போஷிக்குக.

ஸஹ வீர்யம் கரவாவஹை:– இருவருஞ் சேர்ந்து வீரியத்துடன் உழைப்போமாக.

தேஜஸ்விநௌ அதீதம் அஸ்து:– எங்கள் கல்வி ஒளியுள்ளதாக இருக்கவேண்டும்.

மாவித்விஷாவஹை:– நாங்கள் ஒருவரையொருவர் பகைத்துக் கொள்ளாமலிருக்கவேண்டும்.

‘ஓம்’ ஸாந்தி: ஸாந்தி; ஸாந்தி:- முவ்வகையிலும் சாந்தி நிலவுக.


இந்தப்பிரார்த்தனையில் ஐந்துவாக்கியங்கள் உண்டு. ஒவ்வொன்றிலும் குருவும் சீஷனும் தங்களை இணைத்துக்கொண்டே பேசுகின்றார்கள். ஸஹ ( உடன் ) நௌ [நாங்கள் இருவர்] என்ற சொற்கள் மீள மீளத் தோன்றுகின்றன. மற்றவையும் இருமை காட்டும் சொற்கள். இந்த இணைப்பில் ஒரு இரகசியமுண்டு. இந்த உபநிஷத்தின் மற்ற இரகசியங்களுக்குமுன் இந்த இரகசியத்தைச் சற்று அலசிப்பார்ப்போம்.

கற்றல் என்ற தொழிலிலே இரண்டுபேர் சம்பந்தப்படுகிறார்கள். அவர்களுடைய உறவு எப்படியானது என்று காண்கிறோம் இங்கே. அவர்கள் உருவத்தால் இரண்டாயிருந்தபோதிலும் உறவால் ஒன்றாகி அத்துவிதமாகி விடுகிறார்கள். உடலும் உயிரும்போல ஆத்மாவும் ஆண்டவனும் போல, குருவும் சீஷனும் அத்துவிதமாகி விடுகிறார்கள். உடலும் உயிரும் அத்துவிதமாகிவிட்டால் வாழ்வில்லை. ஆத்மாவும் ஆண்டவனும் அந்துவிதமாகாவிட்டால் இன்பமில்லை. குருவும் சீஷனும் அத்துவிதமாகாவிட்டால் கல்வியிலே சாரமில்லை. இந்தக் குருவும் சீஷனும் ஒரு முகப்பட்டுக் கொண்டார்கள். ஒரே இலட்சியத்தைநோக்கி உழைப்பதாகச் சங்கல்பம் செய்துகொள்கின்றார்கள்; உழைப்பிலே ஒளி பிறக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். அறிவு வேற்றுமை யாவது அபிப்பிராய பேதமாவது இடையிலே புகுந்து தங்கள் இலட்சியப்பாதைக்கு இடறுகட்டையாய் இருந்துவிடக்கூடாது என்று எச்சரிக்கையாயிருக்கிறார்கள். இந்த மூன்று வகையிலும் சாந்தி நிலவவேண்டும் என்று சர்வேஸ்வரனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

அத்துவித பாவனைக்குரிய ஆத்மீக ஆராச்சியிலே செல்லும் இந்த இருவரும் அத்துவிதமாயியங்கும் அழகு இப்பிரார்த்தனையின் அழகு.

கற்றலின் தத்துவம் என்ன? கல்விப் பண்புயாது? என்ற இரண்டு கேள்விகளுக்கும் இது தக்க பதில் தருகின்றது, இனி,

படித்துக்கொடுப்பவன் ஆசிரியன்; கேட்டுவிட்டிப் போகிறவன் மாணவன் என்றிருக்கின்றது இன்றைய கல்விப்பண்பாடு. 'இது உத்தியோகக்கல்விதானே' என்பர் சிலர். உத்தியோக கல்வியாகட்டும், உபநிஷத் கல்வியாகட்டும்; ஆங்கிலக்கல்வியாகட்டும்; ஆத்மீகக் கல்வியாகட்டும்; எந்நிலையிலும் கல்வி கல்வியேதான் என்பதை உணர வேண்டுவது நம் பொறுப்பு. கல்விப்பண்பும் கல்வி யொழுக்கமும் கைக்கொள்ளப்படாதவரை கல்வி கல்வியாகாது. உன்னதமான ஒரு இலட்சியத்தை முன்னிட்டு ஆசிரியனும் மாணவனும் அயராதுழைக்க அவர் உழைப்பிலே ஒளிபிறக்க கல்வி உயிர்த்தத்துவம் அடைகிறது. ஆரம்பக்கல்வியிலேயே இது சித்திக்குமாயின் ஆத்மீகக்கல்விக்கென்று அத்திவாரம் வேறு வேண்டியதில்லையல்லவா!



## பொன்மொழிகள்

நெருப்பின் அருகில்சென்றால் நமதுமுயற்சி இன்றியே நாம் அனலை உணருகின்றோமல்லவா? அம்மாதிரியே அவதார புருஷருடைய சந்நிதி ஞான ஒளியும் பேரின்பவெள்ளமும் நிறைந்து இருக்கும். அவருடன் ஒருநாள் நெருங்கிப்பழகினாலும் அதனால் கிடைக்கப்பெறும் ஆனந்தம் ஒரு ஜீவிய காலத்தின் துயர்களையெல்லாம் போக்கிவிடும்.



# ஐயம் தெளிதல்

கேள்வி: தெரிசனங்கள் என்று சொல்லக்கூடியவைகள் ஆறும் எவை?

பதில்: நியாயம், வைசேடிகம், பூர்வமீ மாம்சை சாங்கியம், யோகம், வேதாந்தம் என ஆறும் ஆகும்.

கேள்வி: வழிபாட்டுக்குரிய விக்கிரகங்களை எத்தனை வகையாக வகுத்துள்ளார்கள்.

பதில்: எட்டு விதங்களாக வகுத்துள்ளார்கள். அவை சைலி, தாரு, லௌகி, லேப்பிய, லேக்கிய, சைகதி, மனோமயி, மணிமயி என்பனவாகும்.

கேள்வி: ஒரு ஞானியிடத்தில் ஞானத்தை எங்ஙனம் பெறலாம்.

பதில்: இதற்கு விடையை ஸ்ரீமத் பகவத் கீதையில்ஞான கர்ம சன்யாச யோகம் 34வது சுலோகத்தில் காணலாம். அதாவது ஞானிகளுக்குப் பணிந்தும், கேட்டறிந்தும் பணிவிடை செய்தும் நீ அதைப்பெறுக.

கேள்வி: மகாவிஷ்ணுவின் கையில் சக்கரம், கதாயுதம், தாமரை இவைகள் வைத்திருப்பதன் உட்பொருள் என்ன?

பதில்: இவை படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் குறிக்கின்றன. தாமரை படைத்தல், கதாயுதம் காத்தல், சக்கரம் அழித்தலைக் குறிக்கும்.

கேள்வி: உருத்திராக்கம் என்பதின் உட்பொருள் என்ன?

பதில்: துன்பத்தைத் துடைக்க வல்லதென்று பொருள்படும்.

கேள்வி: ஜெபத்துக்குரிய உருத்திராட்ச மணிகளைச் சுத்திசெய்வது எங்ஙனம்?

பதில்: கோரோசனை, கஸ்தூரி, மஞ்சள், புனுகு, பச்சைக்கற்பூரம், சந்தனம் இவைகள் கரைத்த தண்ணீரில்கழுவி எடுத்து பஞ்சகௌயத்தில் தோய்த்து எடுத்து மீண்டும் நன்னீரில் கழுவி எடுத்து குறித்தமந்திரங்களைக் கொண்டு நியாசம் செய்ய வேண்டும்.
பின்னர் மணிகளைக்கோக்கும்போது சிவ மந்திரம் அல்லது இஷ்டதெய்வத்தின் மந்திரத்தை ஜெபம் செய்து மாலையாகக் கோத்து பூஜை, சம்பாதம், ஸ்பர்சம் இவைகள் செய்து அணிய வேண்டும்.

கேள்வி: நரகம் எங்கே இருக்கிறது?

பதில்: எங்கிருந்தாலும் பண்படாத உள்ளத்தின் மத்தியில் சாதாரணமாக இருக்கின்றது.

கேள்வி: ஆத்மா என்றுலென்ன?

பதில்: அண்ட சராசரங்களுக்கும் அடிப்படைத் தத்துவமாயிருக்கின்றது எதுவோ அதுவே ஆத்மா.

கேள்வி: யோகசாஸ்திரத்தில் கூறும்முத்திரைகள் எத்தனை வகைப்படும்?

பதில்: இவை பத்து வகைப்படும். அவை மகா பெந்தம் மகாமுத்திரை மகாவேதம்கேசரி உட்டியாண மூலபெந்தம்



ஜாலந்திர பெந்தம், விபரீதகரணி, வச்சிரோலி, சக்தீசலனம். என்பனவாகும்.

கேள்வி: பிராணயாமம் மந்திரஜெபத்தோடு செய்வது நல்லதா அல்லது சும்மா செய்வது நல்லதா?

பதில்: பிராணயாமத்தில் சகர்ப்பம், அகர்ப்பம் என இரண்டுவிதமுண்டு. சகர்ப்பம் ஜெபத்தோடு செய்வது. அகர்ப்பம் ஜெபமில்லாமல் செய்வது. இதில் சாதகனுக்கு எது எளிதாயிருக்கின்றதோ அந்த முறையைக் கையாளுவது நல்லது.

கேள்வி: வேதாந்தம், சித்தாந்தம் என்ற பதங்களின் அர்த்தமென்ன?

பதில்: முற்றன முடிவென்று இரண்டு பதங்களும் பொருள்பெறும், முற்றிய அறிவு என்றும் பொருள்படும்.
வேத+அந்தம் (வேத=அறிவு; அந்தம்=முடிவு) சித்த+அந்தம் (சித்=அறிவு, அந்தம்=முடிவு)
எனவே வேதாந்தம், சித்தாந்தம் என்பன அறிவின் முடிவென்று பொருள்பெறும்.

கேள்வி: மாயாசக்தி என்று சொல்லப்படுவது என்ன?

பதில்: பரம் பொருள் தன்னை ஜெகத்தாகவும். ஜீவனாகவும் காட்டிக்கொள்ளும் வல்லமைக்குமாயாசக்தி என்று கூறலாம்.

கேள்வி: ஒருவர் யோகசித்தி அடையக்கூடிய சுருங்கிய காலம் எவ்வளவு?

**பதில்:** பூரணபிரம்மசரிய விரதம்பூண்டு யோகாங்கங்களை முறையாகப் பெருமுயற்சியுடன் ஒரு ஆண்டு செய்தால் சித்திகளில் சிலவற்றை அடையலாமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

**கேள்வி:** உலகம் எப்பொழுதாவது சிறப்படையுமா

**பதில்:** சிறப்படைய வேண்டியது நாம்தவிர உலகமல்ல

**கேள்வி:** சிவம் என்றாலென்ன?

**பதில்:** எது மங்கள கரமாயிருக்கின்றதோ அது சிவம்.

**கேள்வி:** சிவனை வழிபடுவதற்கு ஏற்ற நாட்கள் எவை?

முருகனை வழிபடுவதற்கு ஏற்ற நாட்கள் எவை?

சக்தியை வழிபடுவதற்கு ஏற்ற நாட்கள் எவை?

**பதில்:** இறைவனை வழிபடுவதற்கு ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி யாவும் நல்ல நாட்களே.

இறை வழிபாட்டிற்கு எந்த நாளையும் எந்த நேரத்தையும் உபயோகப்படுத்திக்கொள்ளலாம். ஆனால் எப்போதும் கோவிலுக்குச்சென்று வழிபாடு நடாத்த வாய்ப்பு இல்லாதவர்கள் திங்கள், செவ்வாய், வெள்ளி, பிரதோஷம், பௌர்ணமி, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாதப்பிறப்பு, ஆண்டுப்பிறப்பு, சிவராத்திரி, நவராத்திரி, முதலிய காலங்களில் தவறாது இறை வழிபாட்டைச் செய்து வருவது நலம் பயக்கும்.



சிவனை வழிபடுவோர் திங்கள், வெள்ளி (கார்த்திகைத் திங்கள், ஐப்பசிவெள்ளி முக்கியம்) சிவராத்திரி காலங்களில் வழிபாடு செய்வதாலும், முருகனை வழிபடுவோர் செவ்வாய், வெள்ளி, (ஆடிச் செவ்வாய் முக்கியம்) கந்தர்ஷட்டி விரத நாட்களில் வழிபாடு செய்வதாலும், சக்தியை வழிபடுவோர் திங்கள், வெள்ளி நவராத்திரி பத்துத் தினங்களிலும் வழிபாடு செய்து வருவாராயின் நற்பலனைப் பெறுவார்கள்.



## பொன்மொழிகள்

தன்னறிவே பொன்னறிவுப் மெய்யறிவு, அதன் முன் நூலறிவு மிகவும் அற்பமானது. உயர்ந்த நூல்களை அருட்புலவர் வாக்குகளைச் சிலகாலம் ஆராய்; அதன்பிறகு படிப்பற்று கேள்வியற்று உன்னையே உள்ளே ஆராய்; பிறகு நீயே உனக்கு வானினும் விரிந்த நூலாவாய். தன்னையறிந்தவன் அந்நியங் காணான்; தானாகவே உலகைக்காண்பான்.

# கல்லைக்கண்டால் நாயைக்காணோம்

நடுவூரில் நல்லமரம் பழுத்தாற்போல ஒரு ஊரில் ஒரு பிரபு இருந்தார். அவர் வரையாது வழங்குபவர். அவரது கொடையினைப்பற்றி அயலூரவர்களும் அறிந்திருந்தனர். கொடையின் புகழ் உலகெங்கும் பரந்தது. மிகத்தொலைவிலுள்ள புலவர் ஒருவா கேள்விப்பட்டார். பிரபுவைத் தேடிப் புறப்பட்டார். பிரபுவின் வீட்டைநோக்கி வந்து கொண்டிருக்கிறார். தூரத்தே வரும்போதே வாசலில் நிற்கும் காவற்காரனைக் கண்டார். அந்தக் காவற்காரனுக்குப் பக்கத்திலே பெரியதோர் நாயும் படுத்திருக்கக் கண்டார். புலவருக்கு நாய் என்றால் பயம். நாயைக்கண்டதும் பரிசின் ஆசை பறந்தே போய்விட்டது. வந்த வழியே திரும்பிவிட்டார். புலவர் வந்து திரும்பியதைக் காவற்காரன் கவனித்தான். கைதட்டிக் கூப்பிட்டான். புலவர் திரும்பிப்பார்த்தார். நாயின் பருத்த உருவம் கணமுன்னே வந்துநின்றது. எடுத்தார் ஓட்டம். கண்ணுக்கெட்டிய தூரம் ஓடிச்சென்று மறைந்துவிட்டார். ஊரின் புறத்தே உள்ள சத்திரத்திற்கு சென்று தங்கினார். மறுபடியும் பரிசுபெறும் ஆசை உள்ளத்தே முகிழ்ந்தது. மறுநாட் காலை மனதை நன்கு திடப்படுத்திக்கொண்டு பரிசுபெறப் புறப்பட்டார். இன்று காவற்காரனை மாத்திரந்தான் தூரத்திலே வரும்போது பார்த்தார். காவற்காரனும் நேற்றைக்கு வந்த ஆசாமிதான் என்று கண்டுகொண்டான். புலவரும் 25 யார் தூர இடைவெளியில் வந்துவிட்டார். காவற்காரன் சிறிது விலங்கினான். நாயின்தோற்றம் காட்சி அளித்தது. புலவரையே நிமிர்ந்து பார்த்துக்கொண்டு படுத்துக் கிடந்தது. புலவரின் நெஞ்சு திக் என்றது. வேகம் குறைந்தது. நின்றே விட்டார். மெல்லத்திரும்பினார். காவற்காரன் கவனித்துவிட்டான். மெல்லப்பின்னால்ஓடிச்சென்று புலவரைப் பிடித்துக்கொண்டான். நீர் எங்கு வந்தீர்? ஏன் திரும்பிச் செல்கிறீர் எனக்கேட்டான். பிரபுவிடம் பரிசுபெற வந்தேன், உங்கள் நாயைப் பாாத்தவுடனே பரிசு ஆசை யெல்லாம்



பறந்துபோய்விட்டது என்றார்புலவர்,

காவற்காரனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது அந்த நாய் ஒருவரையும் ஒன்றுமே செய்யாது. நீங்கள் பயமில்லாமல் வாருங்கள என்று தைரியமூட்டினான் காவற்காரன். புலவர் பயந்துபயந்து காவற்காரன்மறைவிலேயேசென்று கொண்டிருந்தார். நாய்க்குக் கிட்டச்சென்று காவற்காரன் நாயைத் தடவினான். நாய் பேசாமல் படுத்துக்கிடந்தது. புலவருக்கும் சிறிது தைரியம் பிறந்தது. மெல்லச் சென்று தடவினார். ஒரே ஆச்சிரியமாகப் போய்விட்டது. இது என்ன கல்லா? என்றார். சலவைக்கல்லினால் செய்யப்பட்டு உண்மை நாய் போலத் தோற்றம் அளித்தது.

புலவா முதலில் அந்த உருவைப் பார்த்தபோது நாயின் உருவையே பார்த்தார். கிட்டச்சென்று பார்த்தபோது கல்லே தென்பட்டது. நாயின் உரு மறைந்துவிட்டது. இதனையே நம்முன்னோர் ஒரு பழமொழியாற் கூறினர். கல்லைக்கண்டால் நாயைக்காணோம் நாயைக் கண்டால் கல்லைக்காணோம். இதே தத்துவம் இவ்வுலகிலும் உள்ளது. உலகம் முழுவதும் இறைவன் நிரம்பி உள்ளான். இறைவன் இல்லாத இடமேஇல்லை. உலகைப்பாாத்தால் இறைவன் மறைந்து விடுகிறான். இறைவனைப் பார்ப்பவனுக்கு உலகம மறைந்துவிடுகிறது. மரத்தாற் செய்யப்பட்டதொரு யானை தந்தையும் மகனும் சென்றுபார்க்கின்றனர். மகன் கேட்கின்றான். அப்பா இந்தயானை அழகாக இருக்கின்றது. இதில் ஏறிச் சவாரிசெய்யவேண்டும் என்கின்றான். தந்தை சொல்லுகிறார். இது கருங்காலி மரத்தாற் செய்யப்பட்ட யானை. இதில் செல்லமுடியாது. மகன் உள்ளத்தில் யானை தெரிந்தது. மரம் மறைந்துவிட்டது. தந்தை உள்ளத்தில் மரம் தெரிந்தது. யானை மறைந்துவிட்டது. இதனையே திருமூலப் பெருந்தகையார்

மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்பெரும்பூதம்
பரத்தில் மறைந்தது பார்பெரும்பூதம்

என்கின்றார். உலகத்தில் நல்லதைப்பார்க்கத் தொடங்கினால்

கெட்டது மறைந்து விடுகின்றது. உலகத்தில் நல்லதைப் பார்க்கத் தொடங்கினுல் நல்லது மறைந்து விடுகிறது. அன்னை சாரதாதேவியார் இராமேஸ்வரயாத்திரை வந்திருந்தார். எம்பிரான்முன் மண்டியிட்டுக் கண்ணீர்வாரப் பின்வருமாறு வேண்டினுர். எம்பெருமானே இவ்வுலகத்தில் எவருடைய தீமையும் என்கண்களுக்குத் தெரியாதிருக்க வேணடும். கழுகு ஆகாயத்திலே உயரப்பறந்தாலும் அதனுடைய கண்களுக்குப் பூமியிலே உள்ள அழுகிய பொருட்கள்தான் தெரியும். மனிதன் எதிலே பழகுகின்ருனே அதேதான் வாழ்க்கையில் பிரதிபலிக்கின்றது.

ஒருநாள் துரியோதன மகாராசாவும் தர்மமகாராசாவும் ஸ்ரீகிருஸ்ணபரமாத்மாவுடன் ஊரினைச்சுற்றிப் பார்க்கச் சென்றிருந்தார்கள். வீட்டிற்கு வந்ததும் கிருஷ்ணபரமாத்மா இருவரையும் ஒரு கேள்வி கேட்டு வைத்தார். ஊர் எப்படி இருக்கிறது என்பதுதான் அந்தக் கேள்வி. இந்த ஊரிலே ஒருநல்லவனுவது இல்லை என்று துரியோதன மகராசா பதில் அளித்தார். இந்த ஊரிலே ஒரு கெட்டவனுவது இல்லையென்று தருமராசா பதில் அளித்தார். இருவரும் பார்த்த ஊர் ஒன்றேதான். ஒரே மக்களைத்தான் பார்த்தனர். விடையில் ஒன்றுக்கொன்று முரண்பாடு இருந்தது. காரணம் அவர்கள் உள்ளமே. பச்சைக் கண்ணுடியைப்போட்டுப் பார்ப்பவனுக்கு உலகமெல்லாம் பச்சையாகவே தோற்றும். ஆகவே மனிதனது அபிப்பிராயம் அவனது உள்ளத்தின் உயர்வைப்பொறுத்ததே. ஆதலினுல்தான் பெரியோர் **நலமே நினைந்து, நலமே பேசி, நலமே செய்க** என்றனர்.



# சந்தா நேயர்களுக்கு

சோதியின் 11-ம் ஆண்டு முதல் சுடர் இதோ தங்கள் கைக்கு வந்துள்ளது. இன்றுவரை சந்தா அனுப்பாத நேயர்கள் தத்தமது சந்தாப்பணத்தை உடன் அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேம்.

## இந்தியாவிலுள்ள சந்தா நேயர்கள்

இந்தியாவிலிருந்து நேராக இவ்விடம் பணம் அனுப்புவதில் சில தடைகள் இருப்பதால் அவர்கள் தமது சந்தாவைப் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு இவ்விடமும் அறியத்தர வேண்டுகின்றேம்.

இந்தியாநேயர்கள் பணம் அனுப்பவேண்டிய விலாசம்

**R. VEERASAMBU,**

**Sambu Industries, SALEM 2.**

மலாயா, தென்னுபிரிக்கா, பர்மாவிலுள்ள நேயர்கள் தமது சந்தாவை வழக்கம்போல் பிரிட்டிஸ் போஸ்ரல் ஓடர்மூலம் அனுப்பிவைக்கலாம்.

**ஆத்மஜோதி நிலையம்**

**நாவலப்பிட்டி (சிலோன்)**


**- சர்க்கரை கொல்லி சூரணம் -**

(DIABETES) என்னும்

நீரிழிவு மதுமேகத்திற்கு மிகச்சிறந்த சூரணம்.

யாவும் மூலிகையினுல் சித்தர்களின் அனுபவ முறைப்படி தயாரிக்கப்பட்டது.

சர்க்கரை வியாதியினுல் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அற்புத ஔடதம்.

தபாற்சிலவுட்பட டின் ரூபா 6-75.

☞ SAMBU INDUSTRIES – SALEM 2 (S.I)

இலங்கையில் கிடைக்குமிடம்:

**ஆத்மஜோதி நிலையம்**

**நாவலப்பிட்டி - சிலோன்.**

Registered at the G-P-O as a News Paper M-L 59-300

# உருத்திரபுரம் மாதர் ஆச்சிரமம்

இலங்கையில் மாதர்கள் தமது ஆத்மீக வாழ்வில் முன்னேறுவதற்கும், அநாதைப்பெண்களை ஆதரிப்பதற்கும் தகுந்ததோர் ஸ்தாபனம் இல்லாதது மிக வருந்துதற்குரியதே. அக்குறையை நிவிர்த்திசெய்யும் நோக்கமாக மாதர் ஆச்சிரமம் என்ற பெயரோடு உருத்திரபுரத்தில் இப்பணியை ஆரம்பித்துள்ளோம். இக் கைங்கரியத்திற்காக அரசாங்கத்தார் 5 ஏக்கர் நிலம் வழங்கியுள்ளார்கள்- மிகப் பொருத்தமான இடத்தில் நிலம் வாய்த்துள்ளது. உருத்திரபுரம் சிவாலத்திற்குச் செல்லும் வழியில் கோயிலிலிருந்து ,முக்கால் மைல்தூரத்தில் தெருவின் அருகாமையில் அமைந்துள்ளது. ஞானதாகம் கொண்ட பல தாய்மார் ஆச்சிரமத்தை நடத்தவும் ஆச்சிரம வாழ்க்கை வாழவும் முன்வந்துள்ளார்கள் நிலம் காடுவெட்டி நெல் விதைக்கப்பெற்றுள்ளது. ஆச்சிரமத்தைத்தொடங்குவதற்குமுதன் முதலாக 2 கிணறுகளும் 2 சிறிய வீடுகளும் ஒரு மண்டபமும் அவசியம் தேவையுண்டு. இவற்றை ஆரம்பித்து வைப்பதற்குக் குறைந்தது 15000 ரூபாயாவது தேவைப்படுகின்றது. நெல் அறுவடையானதும் ஜனவரி மாதத்தில் இதனைத்தொடங்க உத்தேசித்துள்ளோம். அன்பர்கள் அனைவரும் தம்மாலியன்ற பொருளுதவி புரிந்து இக்கைங்கரியத்தை நிறைவேற்றி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

**மாதர் ஆச்சிரம நிர்வாகிகள்**

குறிப்பு: பணம் அனுப்ப விரும்புவோர்:

மாதர் ஆச்சிரமம்-உருத்திரபுரம்

என்ற விலாசத்திற்கும் அனுப்பலாம்

ஆத்மஜோதி நிலையம்-நாவலப்பிட்டி

என்ற விலாசத்திற்கும் அனுப்பலாம்

Printed by N. Muthiah at the Sri Murugan Press- Punduloya.
Published by N. Muthiah Athmajothi Niliyam Nawalapitiya